

சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 14.06.2024 அன்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2024 – மே மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், அனைத்து கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (16.06.2024) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமத்தைச் சேர்ந்த சின்னதுரை குவைத் தீ விபத்தில் உயிரிழந்ததையொட்டி, முட்டம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் அவரது குடும்ப வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொதுநிவாரண நிதியின் வாயிலாக ரூபாய் 5,00,000க்கான காசோலையை வழங்கினார். உடன் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், சார் ஆட்சியர் (சிதம்பரம்) செல்வி ரஷ்மிராணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் பல்லாவரம் தொகுதியில்

# வாக்காளர்களுக்கு டி.ஆர்.பாலு நன்றி தெரிவித்தார்!

### இ.ஜோசப் அண்ணாதுரை - வே. கருணாநிதி - த. ஜெயக்குமார் - ஜி. கே. ரவி - இ. எஸ். பெர்னாட்- ஏ.கே.கருணாகரன் பங்கேற்பு

பல்லவபுரம், ஜூன் 18-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் திருபெரும்புதூர் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு அவர்கள் போட்டியிட்டு 4,87,029 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்றார் அவர் இன்று பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் பேருந்து நிலையத்தில் தொடங்கி பொழிச்சலூர் பம்மல் வடக்கு பகுதிபம்மல் தெற்கு பகுதி அதைத்தொடர்ந்து பல்லாவரம் வடக்கு பகுதியில் பழைய பல்லாவரம் ஜமீன் பல்லாவரம் கீழ் கட்டளை ஆகிய பகுதிகளுக்கு வீதி வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

பல்லாவரம் தெற்கு பகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி ஆகிய பகுதிகளில் குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை அஸ்தினாபுரம் எம். ஐ. டி ஆகிய பகுதிகளில் வீதி வீதியாக சென்று வாக்காளர்களை சந்தித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி நன்றி என நன்றி தெரிவித்தார் அப்பொழுது மண்டல தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவருமான வே. கருணாநிதி பம்மல் தெற்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. கே. ரவி பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் செம்பாக்கம் வடக்கு பகுதி செயலாளர் ஏ. கே. கருணாகரன் பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஜோசப் செல்வராஜ் ராஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

### தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம்

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு செய்ய வேண்டும்!

### பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூன் 18-

தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு நடத்தி, அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என, தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்தியா போன்ற உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஹேக் செய்ய முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறுவதை ஏற்க முடியாது என்று டெஸ்லா நிறு வனத்தின் தலைவர் எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச்சீட்டு முறையை ஒழித்த பிறகு, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன.

பணியாளர்களைக் குறைக்கவும், வேலை நேரத்தை குறைக்கவும், தேர்தல் முடிவுகளை விரைவாக அறிவிக்கும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன, ஆனால் மின்னணு இயந்திரங்களை ஹேக் செய்ய முடியும் என பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

பல்வேறு நாடுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை நம்பாத நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் மட்டும் வாக்குப்பதிவு இயந்திரங்களை இன்னும் தாங்கி பிடித்துள்ளது. அனைத்துக் கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற குழு முன்னிலையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றிய அறிவியல் ஆய்வு நடத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பான வெள்ளை அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பித்து அதன் மீது விவாதம் நடத்தி நாட்டு மக்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீதான அச்சத்தை களைய வேண்டும்.

இவ்வாறு பி.வில்சன் தனது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# “தம் மக்களுக்காக உழைக்கும் அனைத்துத் தந்தையர்க்கும் நன்றி!”

### தந்தையர் தினம்; முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 18–

‘தம் மக்கள் அவையத்து முந்தியிருக்க உழைக்கும் அனைத்துத் தந்தையர்க்கும் இந்நாளில் நன்றி நவில்வோம்’ என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளி யிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தந்தையர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

**தாம் அடையாத உயரங்களைத் தம் மக்கள் அடைய வேண்டும் என நினைக்கும் பேருள்ளம்தான் தந்தைமை! தம் மக்கள் அவையத்து முந்தியிருக்க உழைக்கும் அனைத்துத் தந்தையர்க்கும் இந்நாளில் நன்றி நவில்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### குவைத் தீ விபத்து :

# மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை அயலக தி.மு.க.வினர் சந்தித்து ஆறுதல்!

### புதுக்கோட்டை மு.பஷீர் அகமது – அலஞ்சியார் – பத்தமடை சிந்தா பக்கீர் நேரில் சென்று தெரிவித்தனர்!

குவைத், ஜூன் 18 -

குவைத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 46 பேர் இறந்தது உலகையே உலுக்கியது.. நெஞ்சை பதைபதைக்க வைத்த நிகழ்வு பெரும் துயரத்தை தந்தது. தமிழ்நாடு அரசின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பாதிக்கப்பட்டவருக்கு உதவிட பல்வேறு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்றும், அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். அதே போல் அயலக தமிழர் நல்வாழ்வு அமைச்சகமும் துரிதப்படுத்த நடவடிக்கையில் இறந்தவர்களின் உடல்கள் கொச்சி விமான நிலையம் வந்தடைந்தன . தமிழ்நாடு அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று உடல்களைப் பெற்றுக்கொண்டார் .

புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா எம்.பி, கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோரின் பரிந்துரையின் பேரில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை அயலக திமுகவினர் சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சரின் சார்பில் ஆறுதலைச் சொல்லி முதல் வரும் அரசும் உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கை சொன்னார்கள் .

விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் முதலமைச்சருக்கும் விரைந்து செயல்பட்டு தங்களை காப்பாற்றிய குவைத் அரசிற்கும் தங்களுக்காக பிரார்த்தனை செய்த நல்ல உள்ளங்களுக்கும் தங்கள் நன்றியை சொன்னார்கள் . தமிழ்நாடு அரசின் சார்பில் எல்லா உதவிகளும், நிவாரணங்கள் கிடைக்கும் என அயலக திமுகவினர் உறுதியளித்தனர் .

குவைத் தீ விபத்தில் காயம் பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை அயலக தி.மு.க. வினர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது , அலஞ்சியார், பத்தமடை சிந்தா பக்கீர் ஆயங்குடி சையத் முஸ்தபா, பத்தமடை நாகூர் பாப்பா தியாகராஜன் அறிவுமணி, ஜஹாங்கீர், திருவாரூர் ச.குமார். செ. காட்டூர் ஆறுமுகம். கறம்பக்குடி அ.ஜாபர் சாதிக் திருவண்ணாமலை ரபீக். ஷாத் அன்வர் பாஞ்சி பீர் முகமது காட்டு பாவா கொளத்தூர் கணேஷ் கறம்பக்குடி அப்பாஸ் சதாம் உடன் சென்று ஆறுதல் கூறினார்கள். தமிழ்நாடு முதல்வரின் “உறுதுணை” உண்டு என்றும் அவரின் ஆலோசனையோடு தேவையான உதவிகளை அயலக தி.மு.க. செய்யும் என்றும் உறுதியளித்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி - கூட்டுறவுத் துறை சார்பில்

# வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படும்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு



சென்னை, ஜூன் 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் மூலம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு தரப்படும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்புல் தெரிவித்துள்ளதாவது :

தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறையில் உள்ள 4456 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான கடன்கள் வழங்குதல், உரம் உள்ளிட்ட இடுபொருள்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் பல சேவைகள் வழங்கும் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன.

விவசாய நிலத்தை உழுதல், விதைப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடை உள்ளிட்ட வேளாண் பணிகளை மேற்கொள்ள, வேளாண் தொழிலாளர்கள் குறைந்துவிட்ட நிலையில், விரைவாகவும், குறித்த நேரத்திலும் விவசாய பணிகள் மேற்கொள்ள, 2938 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இருப்பில் உள்ளன.

**Coope – வாடகை வாடகை சேவை!**

வேளாண் இயந்திரங்களை நியாயமான வாடகையில் விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதற்காக ‘Coop eவாடகை’ என்ற சேவை கூட்டுறவுத்துறை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் டிராக்டர், மினி டிராக்டர், நெல் நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம், தானியங்களை தூற்றி சுத்தம் செய்யும் இயந்திரங்கள் மற்றும் ட்ரோன்கள் உள்ளிட்ட விவசாய இயந்திரங்களும், பவர் டில்லர், ரோட்டோவேட்டர் தெளிப்பான்கள் உள்ளிட்ட விவசாய கருவிகளும், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக உள்ளன.

விவசாய பெருமக்கள் தங்களின் தேவைக்கு பயன்படும் விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ‘உழவர் செயலி’ மூலம் தங்கள் வட்டாரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் வாடகை உள்ளிட்ட விவரங்களைப் பெற்று, முன்பதிவு தேதி, நேரம், நிலத்தின் பரப்பு உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னர் விவசாயிகளின் கைபேசிக்கு, இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான குறுந்தகவல் அனுப்பப்படும். முன்பதிவு செய்த, குறித்த தேதி மற்றும் நேரத்தில் விவசாயிகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்தலாம். மேலும் விவசாயிகள் rcs.tn.gov.in இணைய தளத்தின் மூலம் ‘Coop eவாடகை’ சேவை மூலமும் பதிவு செய்து பயன்படுத்தலாம்.

மேலும், விவசாயிகள் தங்களின் விவசாய தேவைகளுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய கருவிகளை தங்களுக்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு நேரில் சென்று பதிவு செய்து குறித்த நேரத்தில் விரைவாகவும் நியாயமான வாடகையிலும் பெற்றும் பயனடையுமாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை - நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி - பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில்

# துணை பதிவுத் துறைத் தலைவர்கள் - மாவட்டப் பதிவாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

### வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 18-

சென்னை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில் 14.6.2024 அன்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் அனைத்து துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள் (நிர்வாகம்) மற்றும் (தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை), தனித்துணை ஆட்சியர்(முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் மற்றும் மே 2024 மாதத்திற்கான இலக்கு மற்றும் வருவாய் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள் நிர்ணயிக்கப்பட்ட வருவாயினை அடையவும், அரசின் வருவாயை கூட்டு வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

சார்பதிவகங்களில் ஆவணப்பதிவுக்கு வரும் பொது மக்களுக்கு ஆவணம் பதிவு முடித்து எந்தவித குறைபாடு இல்லாத ஆவணங்களை பதிவு நாளன்றே திரும்ப அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

சார்பதிவாளர்களால் பரிசீலனை மற்றும் இதர காரணங்களுக்காக நிலுவை வைக்கப்பட்ட ஆவணங்கள் சீராய்வு செய்யப்பட்டதில் நிலுவை எண்ணிக்கையினை கனிசமான அளவில் குறைத்திட அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சார்பதிவகங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளான வில்லங்கச் சான்று வழங்குதல், சான்றிட்ட நகல்கள் வழங்குதல் ஆகியவற்றினை குறித்த காலத்திற்குள் பொதுமக்களை அலைகழிக்காமல் வழங்க அறிவுறுத்தப்பட்டது.

இது குறித்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள் மற்றும் நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் தொடர் கண்காணிப்பு மேற்கொண்டு இதில் சுணக்கம் ஏற்படாமல் சேவை வழங்குவதை உறுதி செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர்.டி.ஜகந்நாதன், பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருவாரூரில் மாணவர்கள் ஆதார் எண் இணைப்பு முகாம்!

### பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், ஜூன் 18-

திருவாரூர் நகராட்சிக் குட்பட்ட வி.எஸ். ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆதார் எண் இணைக்கும் முகாம் நடைபெற்றது.சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் மாணவர்களுக்கு ஆதார் பதிவு சான்று மற்றும் மாணவர்களுக்கு வங்கி சேமிப்பு அட்டையினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ உடன் பங்கேற்றார்.

திருவாரூர் மாவட்டத்தில் 78 அரசு மேல்நிலைப் பள்ளிகள், 66 அரசு உயர் நிலைப்பள்ளிகள், 206 அரசு நடுநிலைப்பள்ளிகள், 596 அரசு தொடக்கப்பள்ளிகள், 12 அரசு உதவிபெறும் உயர் நிலைப்பபள்ளிகள், 14 அரசு உதவிபெறும் மேல் நிலைப்பள்ளிகள், 29 அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளிகள், 70 அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகள் என 1071 பள்ளிகள் ஜூன் 10ஆம் தேதி திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்றுவருகிறது.

நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆதார் பதிவு அவசியமாக்கப்பட்டுள்ளது. கைவிரல் ரேகை, விழித்திரை பதிவு புகைப் படம் போன்ற விவரங்களின் அடிப்படையில் 12 இலக்கம் கொண்ட இந்த ஆதார் எண் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வழங்கப்படுகிறது. குறிப்பாக ஆதார் எண் அரசு திட்டங்கள் பெறவும் அவசியமான ஒன்றாக உள்ளது. ஆதார் வேண்டி மாணவ, மாணவிகள் விண்ணப் பிக்கும் போது தாமதமாவதை தவிர்க்கும் பொருட்டு பள்ளிகளில் ஆதார் அட்டை பெறும் வசதியை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் பள்ளிகல்வித் துறை புதிய சட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் 5 வயதிற் குட்பட்ட குழந்தைகள் முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகள் அனைவரும் ஆதார் அட்டையை எளிமையாக பெற்று கொள்ளும் வகையில் தமிழ்நாடு முதல்வர் தளபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சகம் வழிகாட்டுதல்களின்படி நடைபெற்ற திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட சோமசுந்தரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆதார் எண் இணைக்கும் முகாமில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன்ஆதார் பதிவு சான்று மற்றும் மாணவர்களுக்கு வங்கி சேமிப்பு அட்டையினை வழங்கினார்.

இந்நிகழ்வில், நகர்மன்ற தலைவர் புவனப்ரி யாசெந்தில்,நகரசெயலாளர்வாரை. எஸ்.பிரகாஷ்,பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.புகழேந்தி, தலைமை ஆசிரியர் தியாகராஜன், பெற்றோர் - ஆசிரியர் சங்க தலைவர் மீராஜ், செயலாளர் முனைவர். மா.வை. பாலசுப்ரமணியம், அரசு அலுவலர்கள், ஆசிரியர், மாணவ, மாணவியர்கள் உடனிருந்தனர்.



திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வி.எஸ்.ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆதார் எண் இணைக்கும் முகாம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் மாணவர்களுக்கு ஆதார் பதிவு சான்று மற்றும் மாணவர்களுக்கு வங்கி சேமிப்பு அட்டையினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ உடன் பங்கேற்றார்.